செய்யவேண்டுமென்று சொன்னால், 35 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டும். ஆகவே, நான் சொல்ல வருவது, நீங்கள் ஒருங்கிணைந்த ஒரு கட்டடத்தைக் கட்டுவது--எதனால் இப்படி ஒரு முயற்சி வந்தது என்று சொன்னால், வேலூரிலே இடம் இல்லையென்ற ஒரு காரணத்தைக் காட்டி இப்படிக் கொண்டுபோய்த் தள்ளியிருக்கிறார்கள். இப்போது வேலூரிலே நிறைய இடம் இருக்கிறது. ஏற்கெனவே காட்பாடியிலே D.I.G. office இருக்கிறது. D.I.G. office-ஐ வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், பதிவாளர்-Sub-Registrar Office-I, Sub-Registrar office-II என்று இருப்பதை--வேலூர் பகுதி மக்கள் நெடுந்தொலைவு சென்று பதிவு செய்யக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறதென்று சொன்னால், அது வேலூர் மக்களுக்கு, வேலூர் தாலுகாவில் இருக்கக்கூடிய மக்களுக்கு இழைக்கக்கூடிய ஒரு அநீதியாகும். ஆகவே, D.I.G. office-ஐ வேண்டுமானால் அங்கே வைத்துக்கொள்ளுங்கள். Sub-Registrar Office-I, Sub-Registrar Office -II-ஐ வேலூரிலே வைப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நானும், திரு. சி. ஞானசேகரனும் அதைப் பேசித் தீர்த்துக்கொள்கிறோம் என்று அமைச்சரவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

36—

சுற்றுச் சுவர்

***29197—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, கோவிலம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

2009 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாம்பரம் தொகுதி, கோவிலம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் சுற்றுச் சுவர் கட்டுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் விதிகளுக்குட்பட்டு சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியில் அரசுப் பள்ளிக் கட்டடங்கள், சற்றேறக்குறைய பல பள்ளிக் கட்டடங்கள் 5 ஏக்கர், 10 ஏக்கர் என்று மிகப் பெரிய அரசுப் பள்ளிகள், வளாகங்களாகத் திகழ்ந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சுற்றுச் சுவர் அமைப்பதன்மூலமாக இன்னும் பல்வேறுபட்ட பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர் அமைத்துத் தந்தால் மாணவர்கள் விளையாடுவதற்கு வசதியாக இருக்கும். பல பள்ளிகளிலே மரங்கள் இல்லாத காரணத்தினால் மதிய உணவுகூட வெயிலிலே சாப்பிடுகிற நிலை இருக்கிறது. ஆகவே, கோவிலம்பாக்கம் பள்ளிக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாயைக் கொடுத்திருக்கின்றோம். அந்தப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் உடனடியாக அமைத்து, அதேபோல் இருக்கின்ற பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர் அமைத்து, குறைந்தபட்சம் இடங்களை நிரப்பி சமன் செய்து கொடுத்தாலே பள்ளிக் குழந்தைகள், மாணவர்கள் விளையாடுவதற்கு வசதியாக இருக்கும். அதனை அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதை இந்த நேரத்திலே தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய கோவிலம்பாக்கம் பள்ளியிலே ஏறத்தாழ 693 மீட்டர் சுற்றுச் சுவர் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து இதுவரை 172 மீட்டருக்குரிய சுற்றுச் சுவர் நிதியை ஒதுக்கியிருக்கிறார். கூடுதலாக

[2009 பிப்ரவரி 20

521 மீட்டர் அவர் கோரியவாறு வரக்கூடிய ஆண்டுகளிலே நபார்டு வங்கியினுடைய திட்டத்தின்மூலமாக அல்லது ஏனைய நிதிகள்மூலமாக நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

பொதுவாகவே, தமிழகத்திலே பகுதி-1 முதல் 7 ஆம் திட்டம் வரை நபார்டு வங்கியிலே எடுத்துக்கொள்ளக்கூடிய திட்டங்களுக்கு சுமார் 1,338 பள்ளிகளுக்கு 6 இலட்சத்து 22 ஆயிரம் மீட்டர் சுற்றுச் சுவர் அமைப்பதற்கு இப்போது அரசினுடைய பரிசீலனையில் ஏறத்தாழ 1,139.05 இலட்சம் ரூபாய்க்குத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, நபார்டு வங்கியினுடைய உதவி கோரப்பட்டிருக்கிறது. நபார்டு 8 மற்றும் 9-வது திட்டங்களிலே பள்ளிகளுக்கு எடுத்துக்கொள்ளுகிறபோதே சேர்த்தே சுற்றுச் சுவரையும் நாங்கள் இப்போது எடுத்துக்கொள்கிறோம். எனவே, படிப்படியாக அத்தகைய கோரிக்கைகள் நிறைவேற்றித் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு சென்னையை ஒட்டியிருக்கிற தாம்பரம் பகுதியில் பல ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் இருக்கின்றன. நகராட்சிப் பகுதிகளுக்கும், பேரூராட்சிப் பகுதிகளுக்கும் போதுமான நிதி அந்தப் பகுதிகளிலே இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறது, ஊராட்சிகளைத் தவிர. அந்தப் பகுதிகளிலே ஒரு பள்ளியிலே இரண்டாயிரம் குழந்தைகள், மூவாயிரம் குழந்தைகள் என்று படிக்கின்றார்கள். அதிலே உள்ளாட்சியோடு இணைத்துக்கொண்டு அல்லது பேரூராட்சி மற்றும் நகராட்சிகளோடு இணைத்துக்கொண்டு அந்தப் பகுதிகளிலே கழிப்பிடங்களை சுத்தம் செய்வதற்குப் போதிய ஆட்கள் இல்லாமல் இருக்கிறது. அதேபோல, காவலர்கள் அங்கே இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே அரசின்மூலமாகவோ அல்லது தனியார்மூலமாகவோ அதை இணைத்துக்கொண்டு, அந்தப் பொதுக் கழிப்பிடங்களை சுத்தம் செய்வதற்கும், இரவு நேரக் காவலர்களைப் பணியில் அமர்த்துவதற்கும் அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

2009 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலே இப்போது கம்ப்யூட்டர் போன்ற விலை உயர்ந்த உபகரணங்கள் வழங்கக்கூடிய சூழ்நிலையில் இரவுக் காவலர் போன்ற பணியிடங்களை நிரப்புவது அத்தியாவசியமானதாக இருக்கிறது என்பதை அரசும் உணர்ந்து இருக்கிறது. அதுபோல, அங்கே இருக்கக்கூடிய கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கும், அதற்குரிய தேவையை அரசு உணர்ந்து இருக்கக்கூடிய காரணத்தினால்தான், அந்தப் பணியிடங்கள் நிரந்தரப் பணியிடங்களாகக்கூட இல்லாமல் இருந்தாலும், அந்தப் பணியிடங்களை outsourcing மூலமாக நிரப்பிக்கொள்வதற்குப் பணியாளர் குழு தன்னுடைய ஒப்புதலைத் தெரிவித்திருக்கிறது. எனவே, தேவைக்கேற்ற அடிப்படையில் அந்தப் பள்ளியினுடைய பெற்றோர்-ஆசிரியர் கழகங்கள்மூலமாகவோ அல்லது அங்கு இருக்கக்கூடிய மற்ற அமைப்புகளின்மூலமாகவோ அந்தத் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த வாரம் கோவை மாவட்டத்திலிருந்து இப்போது புதிதாக உருவாகவிருக்கக்கூடிய திருப்பூர் மாவட்டம், இடுவம்பாளையம் பள்ளிக்குச் சென்றிருந்தபோது--நானும், நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், நம்முடைய அரசு கொறடா திரு. சக்கரபாணி ஆகியோர் அங்கு சென்றிருந்தபோது--அங்கே 'வெற்றி அமைப்பு' என்கின்ற ஓர் அமைப்பினர், தாங்களே அந்தப் பள்ளியைத் தத்தெடுத்துக்கொண்டு அங்கே கழிவறைகளை உருவாக்கி, அவற்றை maintain செய்யக்கூடிய பொறுப்பையும் அவர்கள் சிறப்பான முறையிலே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதுபோன்று தனியார்கள் முன்வருகிறபோது, அரசு நிச்சயமாக அதற்கு ஊக்கம் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராம்பிரபு.

திரு. இரா. இராம்பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, பரமக்குடி நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசால் 95 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, பணிகள்

சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காக நான் நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய அமைச்சர், மாண்புமிகு குடிசைமாற்றுத் துறை--வாரியத்தினுடைய அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் சத்திரக்குடி, பார்த்திபனூர், பரமக்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தினால், பகலிலே அந்தப் பள்ளிகளுக்குள் கால்நடைகள் நுழைகின்றன. இரவிலே சில சமூக விரோதிகளின் சமூக விரோதச் செயல்களுக்கு அந்தப் பள்ளிகள் கூடாரமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கக்கூடிய பள்ளிகளை நானும் மிக நன்றாக அறிவேன். குறிப்பாக, பார்த்திபனூர் பள்ளி என்னுடைய ஒன்றியத்திற்கு அருகே இருக்கக்கூடிய காரணத்தினால், அந்தப் பள்ளிக்கே நான் பல முறை சென்று இருக்கிறேன். அந்தத் தேவை அங்கே அவசியமாக இருக்கிறது என்பதையும் அரசு உணர்ந்திருக்கிறது. எனவே, அந்தப் பள்ளிகளை இப்போது நபார்டு வங்கி பத்தாவது திட்டம்--இன்னும் அந்தப் பட்டியல் இறுதி செய்யப்படவில்லை. சட்டமன்றம் நடந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால் உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை அறிந்துகொண்டு, அதற்குப் பிறகு அந்தப் பட்டியலை இறுதி செய்யலாம் என்று இருக்கிறோம். அந்தப் பள்ளிகளை இந்தப் பட்டியலில் எடுத்துக்கொள்வதற்கு நிச்சயமாக அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. முருகவேல்.

திரு. கே. முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 வகுப்பறைகள் கட்டித் தந்த பள்ளிக் கல்வித்

2009 பிப்ரவரி 20]

துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்து, அந்தப் பள்ளியினுடைய சுற்றுச் சுவர் கட்டுவதற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு அளித்த விடை முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினருக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில் உள்ள கொட்டாம்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நடப்பாண்டில் நபார்டு திட்டத்தின்கீழ் சுற்றுச் சுவர் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொட்டாம்பட்டி ஒரு முக்கியமான இடம். திருச்சிராப்பள்ளி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கக்கூடிய ஒரு முக்கியமான ஊர். அந்த ஊரில் அமைந்துள்ள பள்ளிக்கான சுற்றுச் சுவரை இந்த ஆண்டு நபார்டு வங்கியினுடைய பத்தாவது திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வதற்கு நிச்சயமாக அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட, மொடக்குறிச்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மின்னப்பாளையம் மேல்நிலைப்

[2009 பிப்ரவரி 20

பள்ளி கடந்த ஆண்டுதான் தரம் உயர்த்தப்பட்டது. அது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, அதற்கும், அதேபோல, கொடுமுடி ஒன்றியத்திலே இருக்கிற அண்ணா நகர் அரசு உயர்நிலைப் பள்ளி, தாமரபாளையம் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளுக்கும் பின்தங்கிய பள்ளிகளாக இருக்கின்ற காரணத்தினாலே, சுற்றுச் சுவர் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையின் அடிப்படையில் உறுப்பினர் அவர்களுடைய கருத்து நிச்சயமாகப் பரிசீலிக்கப்பட்டு, அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி.

திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, பல்வேறு அரசுப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, அப்படிப்பட்ட பள்ளிகளுக்கெல்லாம் நபார்டு திட்டத்தின்மூலமாகப் புதிய கட்டடங்கள் வருங்காலங்களில் கட்டித் தரப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், தரம் உயர்த்தப்படுகின்ற பள்ளிகளுக்கு உடனடியாக, மற்ற பள்ளிகளைவிட முன்னுரிமை அளித்து, நபார்டு திட்டத்தின்மூலமாகக் கட்டடங்கள் கட்டப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளையும் ஒரே மாதிரியாகத்தான் பார்க்க முடியும். புதிதாக ஒரு பள்ளி தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற காரணத்திற்காகவே, ஏற்கெனவே தேவை இருக்கின்ற பள்ளிகளை ஒதுக்கிவிட முடியாது. எனவே முதலிலே, அந்தப் பள்ளி அமைந்திருக்கக்கூடிய இடம்--இப்போது நிறைய இடங்களிலே

2009 பிப்ரவரி 20]

கம்ப்யூட்டர் ஆய்வகங்களையெல்லாம் கொடுத்திருக்கிறோம்--அங்கே படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை, பள்ளி அமைந்திருக்கக்கூடிய சூழல் போன்றவற்றைக் கருத்திலே எடுத்துக்கொண்டு, நிச்சயமாக அந்தத் தேவைகளை உணர்ந்து, படிப்படியாக அரசு அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

சாலை வசதி

***42—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, மலைவாழ் மக்கள் வாழும் சித்தேரி ஊராட்சிக்குட்பட்ட கலசப்பாடி, மண்ணூர், அரசநத்தம் போன்ற பதினைந்துக்கும் மேற்பட்ட கிராமங்களுக்குச் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

சித்தேரி ஊராட்சியிலுள்ள கலசப்பாடி கிராமத்திற்கு சித்தேரி கிராமத்திலிருந்து நொச்சிக்குட்டை, கருக்கம்பட்டி வழியாக 20 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலை உள்ளது. சித்தேரி கிராமத்திலிருந்து மண்ணூர் கிராமத்திற்கு கல்நாடு கிராமம் வழியாக 10 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலை உள்ளது. மேற்கண்ட சாலைகளை மேம்படுத்த வேண்டுமேயானால், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று, ஊரக வளர்ச்சித் துறையினரால், 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்ட வழிகாட்டுதலின்படி கருத்துரு அனுப்பப்படுமேயானால், மைய அரசின் அனுமதி பெற்றுத் தரப்படும். கலசப்பாடி கிராமத்திலிருந்து அரசநத்தம் கிராமத்திற்கு பட்டா நிலங்களின் வழியாக ஊராட்சி சாலை உள்ளது. எனவே, மேற்படி ஊராட்சி அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

11-420—2a